MAY 2022 **P/ID 35326/PTL4S**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையளிக்க.

1. ஆற்றுப்படைக்குத் தொல்காப்பியம் வகுத்த இலக்கணம் யாது?

2. திருமுருகாற்றுப்படையின் வேறுபெயர் என்ன?

3. நறுவீ - பொருள் கூறுக.

4. முல்லைப் பாட்டில், விரிச்சி நின்றோர் யாவர்?

5. 'எய்யா மையல்' என்றால் என்ன?

6. பரவுதல் - பொருள் சுட்டுக.

7. படர் என்றால் என்ன?

8. கதிர்ச் செல்வன் - யார்?

9. பட்டினப்பாலை கந்து என்று எதைக் குறிக்கிறது?

10. கொண்டி மகளிர் என்போர் யாவர்?

11. காஞ்சித் திணைக்குத் தொல்காப்பியம் வகுத்த இலக்கணம் என்ன?

12. 'கோல நெடுநல்வாடை' - நயம் பாராட்டுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையளிக்க.

13. 'கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பு' என்று முருகாற்றுப்படை குறிப்பது யாது?

14. பழமுதிர்சோலையின் இயற்கை வளத்தை எடுத்துரைக்க.

15. குறிஞ்சிப்பாட்டுத் தோழியின் எடுத்துரைப்புத் திறனை வெளிப்படுத்துக.

16. 'உருகெழு தாயம் ஊழின் எய்தி' என்று பட்டினப்பாலை உணர்த்தும் செய்தி யாது?

17. பட்டினப்பாலை விவரிக்கும் இயற்கை அழகை எடுத்துரைக்க.

18. 'முந்நீர் வரம்பாக ஆண்டவன்' என்று மதுரைக்காஞ்சி வருணிப்பதை விளக்குக.

19. வாடைக் காற்றின் இயல்பு யாது?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையளிக்க.

20. திருமுருகாற்றுப்படை முருகனின் அருள் திறத்தை வெளிப்படுத்தும் பாங்கைப் பகர்க.

21. முல்லைப் பாட்டில் முல்லைத் திணையின் முப்பொருள்களும் பயிலுமாற்றை எடுத்துரைக்க.

22. ‘இரு பேர் அச்சமொடு யானும் ஆற்றலேன்’ என்று குறிஞ்சிப் பாட்டுத் தோழி உரைத்தது யாது?

23. நெடுஞ்செழியனின் கொடைச் சிறப்பை விவரிக்க.

24. நெடுநல்வாடை உளவியல் பாங்குடன் படைக்கப்பட்டுள்ளதா? ஆராய்க.

———————